# பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரை

**12 மே 2025**

இந்நாட்டின் அன்பிற்குரிய மக்கள் அனைவருக்கும் வணக்கம்.

கடந்த சில நாட்களாக நாம் அனைவரும் நாட்டின் பலத்தையும் அதன் பொறுமையையும் பார்த்தோம். இச்சந்தர்ப்பத்தில், இந்தியாவின் வீரம் மிகுந்த படைகளுக்கும், ஆயுதம் தாங்கிய படையினருக்கும், நமது உளவுத்துறையினருக்கும், நமது விஞ்ஞானிகளுக்கும், நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் சார்பாகவும் நான் முதலில் தலைவணங்குகின்றேன். நம்முடைய துணிச்சல் மிகுந்த இராணுவ வீரர்கள் 'ஆபரேஷன் சிந்தூரின்' இலக்குகளை அடைவதற்காக அளப்பரிய துணிச்சலை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களது வீரத்திற்கும், துணிச்சலுக்கும், தைரியத்துக்கும் நான் மரியாதை செலுத்துகின்றேன். நாட்டின் ஒவ்வொரு அன்னையருக்கும், ஒவ்வொரு சகோதரிக்கும் மற்றும் ஒவ்வொரு மகளுக்கும் இந்த வல்லமையினை சமர்ப்பிக்கிறேன்.

நண்பர்களே,

ஏப்ரல் 22-ஆம் திகதி பஹல்காமில் பயங்கரவாதிகள் நிகழ்த்திய அந்த மனிதத்தன்மையற்ற தாக்குதல், நம் நாட்டையும், உலகையும் அதிர்ச்சியடையச் செய்தது. விடுமுறை காலத்தை கழிக்கவந்த ஒன்றுமறியா அப்பாவி குடிமகன்களை அவர்களது மதத்தின் அடிப்படையில், அவர்களது குடும்பத்திற்கு முன்னே, அவர்களது குழந்தைகளுக்கு முன்னே இரக்கமில்லாமல் கொன்றனர். இது பயங்கரவாதத்தின் மிகவும் வெறுக்கத்தக்க கொடூரம் மிகுந்த முகமாகும். இந்தியாவின் ஒற்றுமையை சீர்குலைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது எனக்கு தனிப்பட்ட முறையில் மிகுந்த வலியைத் தந்தது. இந்தப் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு முழு தேசமும், ஒவ்வொரு குடிமகனும், ஒவ்வொரு சமூகமும், ஒவ்வொரு வர்க்கத்தினரும், ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒரே குரலில் பயங்கரவாதத்திற்கு எதிராகக் கடுமையான பதில் நடவடிக்கை எடுக்க ஒரேகுரலில் அறிவுறுத்தின. நாங்கள் பயங்கரவாதிகளை முற்றாக ஒழிக்க இந்தியப் படைகளுக்கு பூரண அனுமதி அளித்தோம். இன்று ஒவ்வொரு பயங்கரவாதியும், பயங்கரவாத அமைப்புகளும் பயங்கரவாதத்தினால் ஏற்படும் விளைவைப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். அதாவது, நமது

சகோதரிகள் மற்றும் மகள்களின் நெற்றியில் உள்ள குங்குமத்தை அழிப்பதற்கான அந்த செயலின் பிரதிபலன் என்னவாக இருக்கும் என்று அவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள்.

நண்பர்களே,

ஆபரேஷன் சிந்தூர் என்பது ஒரு பெயர் மட்டுமல்ல, இந்த நாட்டின் கோடான கோடி மக்களுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பு. ஆபரேஷன் சிந்தூர் நியாயத்தை நிலை நாட்டுவதற்கான நமது ஸ்திரமான உறுதிமொழி. மே 6-ஆம் திகதி இரவு, மே 7-ஆம் திகதி காலை, இந்த முழு உலகமும் அந்த உறுதியின் உண்மையான வடிவம் என்ன என்பதைக் கண்டது. இந்தியாவின் இராணுவம், பாகிஸ்தானின் பயங்கரவாத முகாம்களின் மீது, அவர்களுடைய பயிற்சி மையங்கள் மீது துல்லியமாக தாக்குதல் நடத்தினார்கள். பயங்கரவாதிகள் தங்களுடைய கனவில்கூட, இந்தியா இத்தகைய பாரிய முடிவினை எடுக்கும் என்று யோசித்திருக்க மாட்டார்கள். ஆனால், நாடு ஒன்றிணைந்து செயல்பட்டபோது, நாடுதான் முதலில் என்ற எண்ணம் மேலோங்கி நாட்டின் நலனுக்கே முதலிடம் என்ற எண்ணம் ஏற்பட்டதுடன் அதன் அடிப்படையிலான வலுவான முடிவுகளை எடுக்கும்போது, சரியான பெறுபேறுகள் எட்டப்பட்டன.

பாகிஸ்தானின் பயங்கரவாத முகாம்களின் மீது இந்தியா ஏவுகணைகள் மூலமும் ட்ரோன்கள் மூலமாகவும் தாக்குதல் நடத்தியபோது, பயங்கரவாதக் குழுக்களின் கட்டிடங்கள் மட்டுமல்ல, அக்குழுக்களின் நம்பிக்கையும் தவிடுபொடியானது. பகவல்பூர் மற்றும் முரிதுகே போன்ற பயங்கரவாதிகளின் முகாம்கள், உலகளாவிய பயங்கரவாதிகளின் பல்கலைக்கழகங்களாக விளங்கின. உலகில் மிகப்பெரிய பயங்கரவாத தாக்குதல்கள், அதாவது செப்டம்பர் 11-ஆம் திகதி அமெரிக்காவில் நடந்த தாக்குதலாக இருக்கட்டும், லண்டன் நிலக்கீழ் ரயில் தாக்குதலாக இருக்கட்டும் அல்லது இந்தியாவில் பல ஆண்டுகளாக நடந்த பெரிய பெரிய பயங்கரவாத தாக்குதல்களாக இருக்கட்டும், இவ்வாறான தாக்குதல்கள் ஏதோ ஒருவகையில் இந்த பயங்கரவாத முகாம்களோடு தொடர்புகளைக் கொண்டிருந்தன. பயங்கரவாதிகள் நமது சகோதரிகளின் நெற்றிக் குங்குமத்தை அழித்தனர். இதனால் இந்தியா பயங்கரவாதத்தின் தலைமைப் பீடத்தை இப்போது அழித்திருக்கிறது. இந்தியாவின் இந்தத் தாக்குதல்களில் நூற்றுக்கும் அதிகமான கொடிய பயங்கரவாதிகள் இறந்திருக்கிறார்கள். பயங்கரவாத அமைப்புகளின் தலைவர்கள் பலர் கடந்த 25 முதல் 30

ஆண்டுகளாக வெளிப்படையாக பாகிஸ்தானில் உலாவி வருகின்றனர். இத்தகைய பயங்கரவாதிகள் இந்தியாவிற்கு எதிராக தாக்குதல்கள் நடத்தி வந்தார்கள். அவர்களை இந்தியா ஒரே நடவடிக்கையில் அழித்து விட்டது.

நண்பர்களே,

இந்தியாவின் இந்த நடவடிக்கையின் மூலம், பாகிஸ்தான் மிகப்பெரிய அதிருப்தி அடைந்துள்ளதுடன் விரக்தியிலும் வீழ்ந்து நிலைகுலைந்து போய் விட்டது. இந்த நிலைகுலைவின் காரணமாக பாகிஸ்தான் மற்றுமொரு அசட்டுத்தனமான நடவடிக்கையை எடுத்தது. பயங்கரவாதத்தின் மீது இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு துணைபோவதை விட்டுவிட்டு, பாகிஸ்தான் இந்தியாவின் மீது தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தான் நமது பாடசாலைகள், கல்லூரிகள், குருத்வாராக்கள், கோயில்கள், குடிமக்களின் வீடுகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தான், நம்முடைய இராணுவ முகாம்களைக் குறிவைத்தும் தாக்குதல் நடத்தியது. ஆனால், இதில்கூட பாகிஸ்தானின் முகத்திரை கிழிக்கப்பட்டது. பாகிஸ்தானின் ட்ரோன்கள், ஏவுகணைகள் ஆகியவை இந்தியாவின் முன்னே செயலிழந்து போனதை உலகம் கண்டது. இந்தியாவின் பலம் வாய்ந்த பாதுகாப்பு கட்டமைப்புகள், அவற்றை வானிலேயே தடுத்து அழித்தன. பாகிஸ்தான் எல்லைப் பகுதியில், தாக்குதல் நடத்தத் தயாராக இருந்தது. ஆனால், இந்தியா பாகிஸ்தானின் மையப்பகுதியில் தாக்குதல் நடத்தியது. இந்தியாவின் ட்ரோன்கள், ஏவுகணைகள் துல்லியமாக தாக்குதல் நடத்தின. பாகிஸ்தானின் விமானப்படையின் தளங்களுக்கு சேதம் ஏற்படுத்தினோம். இந்த தளங்கள் குறித்து பாகிஸ்தான் மிகுந்த கர்வத்தினை கொண்டிருந்தது. இந்தியா முதல் மூன்று நாட்களில் பாகிஸ்தானில் ஏற்படுத்திய அழிவுகள் குறித்து பாகிஸ்தான் ஒருபோதும் கற்பனைகூட செய்துபார்த்திருக்க முடியாது. எனவே, இந்தியாவின் தாக்குதல்களுக்கு பிறகு, பாகிஸ்தான் அதிலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறைகளை தேடத் தொடங்கியது. இந்தத் தாக்குதலை குறைப்பதற்கான வழிமுறைகளைச் செய்யுங்கள் என பாகிஸ்தான் உலகம் முழுவதிலும் மன்றாடியது. மேலும், முற்றிலுமாக அடிவாங்கிய பின்னர், மே 10-ஆம் திகதி நண்பகலின் பின்னர் ஒரு கட்டாயத்தின் காரணமாக, பாகிஸ்தான் இராணுவத் தளபதி, நம்முடைய இராணுவத் தளபதியோடு தொடர்பு கொண்டார். அதற்கு முன்னதாகவே நாம் பயங்கரவாத கட்டமைப்புகளை மிகப்பெரிய அளவில் அழித்து விட்டோம். பயங்கரவாதிகளை மரணத்தின் எல்லைக்குக் கொண்டு சென்றோம். பாகிஸ்தான் தன்

மையத்தில் ஸ்தாபித்து மறைத்து வைத்திருந்த பயங்கரவாத முகாம்களை நாம் அழித்து விட்டோம். இதனால், பாகிஸ்தானிலிருந்து பெரிய ஓலம் கேட்கத் தொடங்கியது. பாகிஸ்தான் தரப்பிலிருந்து பயங்கரவாத தாக்குதலோ, இராணுவத்தின் மூலம் அசட்டுத்தனமான தாக்குதல்களோ இனிமேல் இருக்காது என்று பாகிஸ்தான் கூறியபோது இந்தியா அதைப் பற்றி சிந்தித்தது. பாகிஸ்தானின் பயங்கரவாத மற்றும் இராணுவ முகாம்கள் மீது எங்களுடைய பதிலடி நடவடிக்கைகள் சிறிது காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டிருக்கிறது என்பதனை நான் மீண்டும் கூறுகிறேன். எதிர்வரும் நாட்களில் பாகிஸ்தானின் ஒவ்வொரு நடவடிக்கையையும் நாங்கள் தீவிரமாக கண்காணிப்போம். அந்நாடு எவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றுகிறது என்பதை கவனிப்போம்.

நண்பர்களே,

இந்தியாவின் முப்படைகளும், நம்முடைய விமானப்படை, தரைப்படை, கடற்படை, எல்லைப் பாதுகாப்புப்படை, இந்திய துணை இராணுவப்படை அனைத்தும் எப்போதும் தயார் நிலையில் இருக்கின்றன. “சர்ஜிக்கல் ஸ்டிரைக்” மற்றும் வான்வழி தாக்குதலுக்கு பிறகு இப்போது ஆபரேஷன் சிந்தூர் இந்தியாவின் கொள்கையாகி விட்டது. ஆபரேஷன் சிந்தூர், பயங்கரவாதத்திற்கு எதிராக ஒரு புதிய வரையறையை வழங்கியுள்ளது. அத்துடன் ஒரு புதிய அளவுகோலும், ஒரு புதிய நியமமும் உருவாகி இருக்கிறது.

முதலில், இந்தியாவின் மீது பயங்கரவாத தாக்குதல் நடந்தால் அதற்கு சரியான பதிலடி கொடுக்கப்படும்.

நாங்கள் எங்களுடைய வழிமுறையில், எங்களுடைய விதிமுறைகளுக்கேற்ப, பதிலடி தருவோம். பயங்கரவாதத்தின் வேர்கள் எங்கெல்லாம் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் சென்று கடுமையான நடவடிக்கை எடுப்போம்.

இரண்டாவதாக, இந்தியா அணுஆயுத தாக்குதல் என்ற மிரட்டலையெல்லாம் சகித்துக்கொள்ளாது. அணுஆயுத தாக்குதல் என்கின்ற மிரட்டலோடு செயல்படுகின்ற பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா நிச்சயமாக துல்லியமாக நடவடிக்கை எடுக்கும்.

மூன்றாவதாக, பயங்கரவாதத்தை ஆதரிக்கும் நாடு மற்றும் பயங்கரவாத குழுக்களின் சூத்திரதாரிகள் ஆகிய இருதரப்பையும் நாங்கள் வேறுபடுத்தி பார்க்கவில்லை. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, உலகம் பாகிஸ்தானின் உண்மையான

முகம் என்ன என்று பார்த்திருக்கிறது. கொல்லப்பட்ட பயங்கரவாதிகளின் இறுதிச்சடங்குகளின்போது, பாகிஸ்தான் இராணுவத்தின் மிகப்பெரிய அதிகாரிகள் அதில் கலந்துகொண்டனர். ஒரு நாட்டால் ஆதரிக்கப்படும் பயங்கரவாதத்திற்கு இதைவிட பெரிய சாட்சி என்ன இருக்கிறது? நாங்கள் இந்தியாவுக்கும் எங்களுடைய குடிமக்களுக்கும் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாத வண்ணம் திடமான முடிவுகளை எடுப்போம்.

நண்பர்களே,

யுத்த களத்தில் நாங்கள் ஒவ்வொரு முறையும் பாகிஸ்தானை தவிடுபொடியாக்கி இருக்கிறோம். மேலும், இந்த முறை ஆபரேஷன் சிந்தூர் ஒரு புதிய கோணத்தை சேர்த்திருக்கிறது. நாங்கள் பாலைவனங்கள், மலைகள் மீது எங்களுடைய திறமையை மிகப் பிரமாதமாக வெளிப்படுத்தியிருக்கிறோம். மேலும், புதிய யுக போர் என்ற பெயரில் எங்களது திறமையை காண்பித்திருக்கிறோம். இந்த ஆபரேஷன் மூலமாக நம்முடைய இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுதங்களின் திறன் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. 21 ஆம் நூற்றாண்டின் போர் முறைகளில் இந்தியாவின் போர்க்கருவிகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை இன்று உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது.

நண்பர்களே,

பயங்கரவாதத்தின் சகல வடிவங்களுக்கும் எதிராக நாம் ஐக்கியப்பட்டுள்ளமையே எமது மிகப்பெரிய பலமாகும். உண்மையில் இந்த யுகம், போருக்கானது அல்ல, ஆனால் இந்த யுகம் பயங்கரவாதத்திற்கானதும் அல்ல. பயங்கரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத் தன்மை, ஒரு நல்ல உலகத்திற்கு உறுதி அளிக்கிறது.

நண்பர்களே,

பாகிஸ்தானின் இராணுவம், பாகிஸ்தானின் அரசாங்கம் எந்த வகையில் பயங்கரவாதத்திற்குத் துணை போகின்றதோ அது ஒருநாள் பாகிஸ்தானை முடிவுக்குக் கொண்டுவரும். பாகிஸ்தான்

அதிலிருந்து தப்பிக்கவேண்டும் என்றால், தன் நாட்டில் உள்ள பயங்கரவாத கட்டமைப்புகளை அது அழிக்க வேண்டும். இதைதவிர, அமைதிக்கு வேறு வழியே இல்லை. இந்தியாவின் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. பயங்கரவாதமும், அமைதிப் பேச்சுவார்த்தையும், ஒருங்கே பயணிக்க முடியாது. பயங்கரவாதமும், வணிகமும் ஒன்றிணைந்து செல்லமுடியாது. தண்ணீரும், இரத்தமும் ஒன்றாக வழிந்தோட முடியாது.

நான் இன்று உலக சமுதாயத்திற்கு ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய நிலைப்பாடு என்னவென்றால், பாகிஸ்தானுடன் ஒருவேளை பேச்சுவார்த்தை நடந்தால் அது பயங்கரவாதம் பற்றியதாக இருக்கும், இல்லாதுவிடில் அது பாகிஸ்தான் ஆக்கிரமித்திருக்கின்ற காஷ்மீரைப் பற்றியதாக இருக்கும்.

அன்புக்குரிய மக்களே,

இன்று புத்த பூர்ணிமா. புத்த பெருமான் நமக்கு அமைதியின் பாதையைக் காட்டியிருக்கிறார். அமைதியின் பாதை வலிமையோடுதான் செல்கிறது. மனிதகுலம் அமைதி மற்றும் வளர்ச்சியை நோக்கிய பாதையில் நடக்கவேண்டும். ஒவ்வொரு இந்தியரும் அமைதியோடு வாழ வேண்டும். வளர்ச்சியடைந்த இந்தியா என்கின்ற நம்முடைய கனவு நிறைவேறவேண்டும். இதற்காக இந்தியா ஆற்றல் வாய்ந்த நாடாக இருக்கவேண்டியது அவசியம். மேலும் தேவை ஏற்படும்போது இந்த சக்தியை நாம் பயன்படுத்த வேண்டும். மேலும் கடந்த சில நாட்களில் இந்தியா இதைதான் செய்திருக்கிறது.

நான் மீண்டும் ஒருமுறை இந்திய இராணுவம் மற்றும் ஆயுதப்படைகளுக்கு தலைவணங்குகின்றேன். இந்திய குடிமக்களின் நம்பிக்கைக்கும், ஒற்றுமைக்கும் வணக்கம் செலுத்துகிறேன்.

நன்றி

பாரத் மாதாகி ஜெய்

பாரத் மாதாகி ஜெய்

பாரத் மாதாகி ஜெய்

மூலம்; https://www.pib.gov.in/PressReleseDetailm.aspx?PRID=2128268&reg=3&lang=2

பொறுப்பு துறப்பு: இது பிரதமரது உரையின் அண்ணளவான மொழிபெயர்ப்பு. மூல உரை இந்தி மொழியில் நிகழ்த்தப்பட்டது.

***